DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.15/2023**

Deposition of witness for Prosecution அ.சா.5

| | | |
|---|---|---|
| பெயர் | : | ராமமூர்த்தி |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | கருப்பையா |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 23.02.2026

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் பிரம்புவயலில் வசித்து வருகிறேன். கடந்த 02.09.2022 ம் தேதி தேவகோட்டை தாலுகா காவல் நிலைய போலீசார் பிரம்புவயல் பஸ்ஸ்டாப் அருகே இருந்த டீ கடை அருகே நடந்த குற்ற சம்பவம் தொடர்பாக சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள 1-ம் கையெழுத்து என்னுடையதுதான். (**மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் கையொப்பம் போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 எனக்கு உறவினாரா என்றால் இல்லை. நான் போலீசார் கேட்டுக் கொண்டதால் கையெழுத்து போட்டேனா என்றால், ஆமாம் நான் அந்த இடத்தில் இருந்தேன், அதனால் போட்டேன்.

**மறு விசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.